eISSN 2456-5148
Vol. 04 Issue: 03 August 2025

# அறிவியல் நோக்கில்; உலகத்தோற்ற ஒடுக்ககோட்பாடுகள் குறித்த திருவாசகப் பதிவுகள்

## From a Scientific Perspective: Thiruvasagam's Records on Theories of Cosmic Creation and Dissolution

**வீ.பொன்னுசாமி[1], முனைவர் நா.சண்முகம்[2], முனைவர்.ஹேமலதாமனேகரன்[3], பா. சித்ரலேகா[4],**

1. ஆய்வுமாணவர், தமிழ்த்துறை,
ஸ்ரீராமகிருஷ்ணாமிஷன் வித்யாலயகலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்

2. துறைத்தலைவர் (பணிநிறைவு), தமிழ்த்துறை,
ஸ்ரீராமகிருஷ்ணமிஷன் வித்யாலயகலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்

3. பேராசிரியர்;, விஷன் இயக்குனரகம் ஆழியாறு, தமிழ்நாடு

4. யோகாமையம், எஸ் ஆர். எம். பல்கலைக்கழகம், செங்கல்பட்டு, தமிழ்நாடு

**V. Ponnusamy[1], Dr. N. Shanmugam[2], Dr. Hemalatha Manoharan[3], P. Chithralekha[4]**

1.Research Scholar, Department of Tamil, Sri Ramakrishna Mission Vidyalaya College of Arts and Science, Coimbatore.

2.Head of Department (Retired), Department of Tamil, Sri Ramakrishna Mission Vidyalaya College of Arts and Science, Coimbatore.

3.Professor, Vision Directorate, Aliyar, Tamil Nadu.

4.Yoga Centre, SRM University, Chengalpattu, Tamil Nadu.

***Abstract:***

*Kambar began his work by stating "He created all worlds," Sekkizhar by stating "He is beyond comprehension, understood by all worlds," and Nakeerar by stating "The world rejoices," all of them commencing their creations by foregrounding the world. Parimelazhagar, who commented on the first Kural, "Aathi Bhagavana Muthatre Ulagu" (The world proceeds from the Primeval Lord), wrote that "ulagu" (world) here refers to living beings. He points out that since the unseen God needs to be explained through the visible world, Valluvar wrote "Aathi Bhagavana Muthatre Ulagu" placing emphasis on the world. The same idea, that just as A, the subtle vowel, mixes with all other letters and causes their manifestation, the unparalleled First Being, in the form of knowledge, pervades everywhere and stands as the cause for the world's manifestation, is stated in Thiruvarutpayan as "Akaravuyir Polaaki" [Like the prime letter A]1. We know that for ages, spiritual wisdom and science have continued their journey to this day, seeking the fundamental cause of cosmic creation. A scientific conclusion states that the five elements and their combinations constitute the non-living things and living beings we observe. This was already articulated by Tolkappiyam as "The world is a mixture of the five – earth, fire, water, air, and sky"2.*

*In Thiruvasagam, which was bestowed as devotional hymns, numerous philosophical subtleties and scientific principles regarding the creation and dissolution of the world are found. Manickavasagar's philosophy posits that the one and only eternal Shiva rose and manifested as this universe. According to the statement "You cause growth without a seed," it is wonderful wisdom to know that when creation began, You gave a body to the soul bound by Anava mala (primal ignorance) without the seed of Karma and caused it to manifest. This article explains Thiruvasagam's theories regarding cosmic creation and dissolution, containing such subtleties, from a scientific perspective.*

***Keywords**: Kambar, Sekkizhar, Aathi Bhagavana, Tolkappiyam, Thiruvasagam*

**ஆய்வுச் சுருக்கம்**

*கம்பன், சேக்கிழார், நக்கீரர் உள்ளிட்ட தமிழ்ப் புலவர்கள் தங்கள் படைப்புகளை 'உலகம்' என்ற சொல்லை முன்னிறுத்தியே தொடங்கியுள்ளனர். பரிமேலழகர் 'ஆதிபகவன் முதற்றே உலகு' என்ற திருக்குறளுக்கு உரை எழுதும்போது, 'உலகம்' என்பது உயிர்களைக் குறிக்கும் எனவும், காணும் உலகு காணப்படாத கடவுளை உணர்த்தும் எனவும் நுட்பமாக விளக்கியுள்ளார். இதே கருத்தை 'அகரவுயிர் போலாகி' எனத் திருவருட்பயனும் உறுதிப்படுத்துகிறது. உலகத் தோற்றத்தின் மூலகாரணத்தை மெய்ஞானமும் விஞ்ஞானமும் ஆராய்ந்து வரும் நிலையில், பஞ்ச பூதங்களின் கலவையே உலகம் என்ற அறிவியல் கோட்பாட்டைத் தொல்காப்பியம் 'நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம்' எனப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தெளிவுபடுத்தியுள்ளது. தோத்திர நூலாகிய திருவாசகம், உலகத் தோற்றம் மற்றும் ஒடுக்கம் குறித்த ஆழ்ந்த சாத்திர நுட்பங்களையும், அறிவியல் கோட்பாடுகளையும் உள்ளடக்கியுள்ளது. அனாதி சிவம் ஒன்றே இப்பிரபஞ்சமாக மலர்ந்தது மாணிக்கவாசகரின் தத்துவம் ஆகும். 'விச்சது இன்றியே விளைச்சல் செய்குவாய்' என்ற திருவாசக அருள்மொழி, வினை என்ற வித்தின்றி உயிர்களுக்கு உடல்கள் வழங்கப்பட்ட அற்புதம் குறித்து விளக்கமளிக்கிறது. இக்கட்டுரை, மேற்கூறிய உலகத் தோற்ற ஒடுக்கம் குறித்த திருவாசகத்தின் தனித்துவமான கோட்பாடுகளை அறிவியல் கண்ணோட்டத்தில் ஆய்வு செய்கிறது.*

**திறவுச்சொற்கள்:** *கம்பர், சேக்கிழார், நக்கீரர், பரிமேலழகர், தொல்காப்பியம்*

**முன்னுரை**

உலகம் யாவையும் தாமுளவாக்கலும் எனக் கம்பனும், உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன் எனச் சேக்கிழாரும், உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு என நக்கீரரும் உலகத்தை முன்னிருத்தியே தம் படைப்புகளை துவக்கியுள்ளனர். ஆதிபகவன் முதற்றே உலகு என்ற முதற் குறளுக்கு உரை எழுதிய பரிமேழலகர் உலகு என்றது ஈண்டு உயிர்கள் மேல் நின்றது என எழுதியுள்ளார். காணப்படும் உலகத்தால் காணப்படாத கடவுட்கு உண்மை கூற வேண்டுதலின் ~~ஆதி பகவன் முதற்றே உலகு|| என உலகின் மேல் வைத்து வள்ளுவர் எழுதியுள்ளதைக் குறிப்பிடுகின்றார். இதே கருத்தை, நுட்ப அகரமாகிய உயிரெழுத்து எல்லா எழுத்துக்களோடுங்கலந்து அவை தோன்றுதற்குக் காரணமாயிருத்தல் போல், ஒப்பற்ற முதல்வன் அறிவு வடிவமாய் எங்கும் நிறைந்து உலகந் தோன்றுதற்குக் காரணமாய் நிற்கிறான் என்பதை ~~அகரவுயிர் போலாகி||1 எனத் திருவருட் பயன் குறிப்பிடுகிறது. காலங்காலமாய் மெய்ஞானமும் விஞ்ஞானமும் உலகத் தோற்றத்தின் மூலகாரணம் தேடி இன்று வரைத் தம் பயணத்தைத் தொடர்வதை நாம் அறிவோம். பஞ்ச பூதங்களும் அவற்றின் கலப்பும்தா ன் நாம் காணும் உயிரற்ற பொருட்களும் உயிரினங்களும் என்பது விஞ்ஞான முடிவாகும். இதனை ~~நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம்||2 எனத் தொல்காப்பியம் முன்னமே வகுத்துக் கூறியுள்ளது.

தோத்திரமாய் அருளப்பட்ட திருவாசகத்தில் உலகத் தோற்ற ஒடுக்கம் பற்றிய சாத்திர நுட்பங்களும், அறிவியல் கோட்பாடுகளும் மிகுந்து காணப்படுகின்றன. ஒன்றே ஒன்றான அனாதி சிவமே இப்பிரபஞ்சமாக எழுச்சி பெற்று எழுந்தது என்பது மாணிக்கவாசகரின் தத்துவம். ~~விச்சது இன்றியே விளைச்சல் செய்குவாய்|| என்பதன்படி, படைப்புத் தொடங்கியபோது, ஆணவமலத்;தால் கட்டுண்டு கிடந்த உயிருக்கு, வினை என்ற விதை இல்லாமலே உடம்பைத் தந்து விளையச் செய்தாய் என்பது அறியவேண்டிய அற்புத ஞானம்;. இத்தகைய நுட்பங்களடங்கிய உலகத் தோற்ற ஒடுக்கம் குறித்த திருவாசகக் கோட்பாடுகளை இக்கட்டுரை அறிவியல் நோக்கில்; விளக்கி நிற்கிறது.

**உள்ளும் புறமுமாய் உள்ளது ஒருபொருள்**

சிவத்தைப் பரம்பொருளாகவே காண்பது சிவபுராணம். நமசிவாய எனத் துவங்கி தொன்னூற்று ஐந்து வரிகளில் அது சிவதத்துவத்தை மெய்யியல் அறிவியலாய் விளக்கியுள்ளது. எந்த ஒன்று, தானொரு தானாய், தானே தானாய், அனைத்துமாகி இருக்கிறதோ, அந்த ஒரு தனிப்பொருளான பரம்பொருளே சிவம் என்கிறார் மாணிக்கவாசகர். ஒன்றிலிருந்து தான் இப்பிரபஞ்சம் தோன்றியுள்ளது என்பதை ~~ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க|| என்ற சிவபுராணப் பதிவு குறிப்பிடுகிறது. தற்போதுவரை உலகம் பெருமளவில் ஏற்றுக்;கொண்ட பெருவெடிப்புக் கொள்கை என்ற அறிவியல் கோட்பாடு இந்த திருவாசச் சிந்தனையைத் தான் தெரிவிக்கிறது. இதே கருத்தை, ~~ஏகம் அனேகம் எனப் பகர் வெளியெனும் ஆகமச் சிற்சபை அருட்பெருஞ்சோதி||3 எனத் தம் அகவலில் உணர்த்துகின்றார் வள்ளலார்.

பதி-பசு-பாசம் என்ற மூன்று அனாதிகளின் கூட்டாக இப் பிரபஞ்சத்தைக் காண்பது சைவ சித்தாந்தம். ஆனாதிகள் மூன்றா அல்லது ஒன்றா என்பது இன்று வரை தத்துவ ஆராய்ச்சிக்கான கேள்வியாக இருந்து வருகின்றது. இதனைத் திருமூலர்,

~~பதிபசு பாசம் எனப்பகர் மூன்றிற்
பதியினைப் போற்பசு பாசம் அனாதி
பதியினைச் சென்றணு காப்பசு பாசம்
பதியணு கிற்பசு பாசம் நில்லாவே||(திருமந். தந்.1. பா.1150

எனக் குறிப்பிடுகின்றார்;. சிவனே சீவனாக வந்ததை அறியாத நிலையில் நம்மை ஐம்புலன்களே வைத்தி;ருக்கின்றன. மனதைப் புலன்களின் வசம் இருந்து விடுவித்து மூலத்தை அறியச்செய்ய தவம் நமக்கு உதவம் என்பதை ~~வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க|| எனக் குறிப்பிடுகிறார் மணிக்கவாசகர். மனதின் வேகம் குறையக் குறைய மனிதன் தன்னை உணர்ந்து இறையுணர்வு பெறவும், ஞானநெறி நின்று உலகத் தோற்றத்தை உணாந்து கொள்ளவும் முடியும் என நமது ஞான மரபு வழிகாட்டுகிறது.

மறைபொருளாக உள்ள சிவன் பஞ்சபூதங்களில் பொருளாகவும், அவற்றின் சேர்க்கையால் உயிரினங்களாகவும், தானே தன்மாற்றம் அடைகின்றான் என்பது சித்தாந்தம்;. சிவமே விண் தொடங்கி மண் வரை அனைத்துமாகி, உருவான அனைத்தையும் இணைக்கும் ஒளியாக, விண்ணிலும் மண்ணிலும் சித்தாகவும் அசித்தாகவும் நிறைந்திருக்கிறது என்பதை ~~விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்|| என்ற தொடர் குறிப்பிடுகின்றது. சிவமே விண்ணாக, காற்றாக, நெருப்பாக, நீராக, மண்ணாக விரிந்திருப்பதை இவரது உள்ளம் வியந்து பார்க்கிறது. ஆத்மனஹா ஆகாஷ் எனப் பரம்பொருளைப் பஞ்சபூதங்களாய்க் காணும் உபநிடதம், அகம் பிரம்மாஸ்மி எனப் பேசும்போது உயிரினத்தையும் பிரம்மத்தையும் ஒன்றாய்க் காண்கிறது. ~~எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்|| என்ற அடியில் மணிவாசகர் சிவனின் வியாபக விரிவை கணக்கிட முனைந்தால் எண்கள் இறந்து போகும் என்கிறார். அதே அடியில் வரும் பெருஞ்சீர் என்பது இயக்க ஒழுங்கை எடுத்துரைக்கின்றது. இதே கருத்தை, ~~சீரார் பெருந்துறை நம் தேவன்|| என்ற அடியும் குறிப்பிடுகிறது. இவற்றால் பிரபஞ்ச இயக்க ஒழுங்கிற்கு ஆதாரம் இறைநி'யின் பேறாற்றலும் பேறறிவும் எனப்புரிந்து கொள்ள முடிகிறது.

**இறைவனின் வியாபகம்**

இறைவனின் வியாபகத்தை ~~ஆழ்ந்து அகன்ற நுண்ணியன்|| என்ற தொடர் விளக்குகிறது. அங்கிங்கெனாதாபடி எங்கும் பூர்த்தியாய், மேலும் கீழுமாய் எல்லாத் திசைகளிலும் நிறைந்திருந்தாலும் இறைவன் புலன்களுக்குப் புலப்படாத நுட்பமானவன். வெம்மையுமாய், குளிர்ச்சியுமாய் விளங்கும் உயிர்களின் தலைவனாகிய அவன்; பொய்மையிலிருந்து உண்மைக்கு நம்மை உய்விப்பவனாகி, மெய்ஞானமாய் இருப்பதை மணிவாசகர் நமக்கு விளக்குகின்றார். பஞ்சபூதங்கள்; ஐந்தையும், இறைசக்தியின் தன்மாத்திரைகள் ஐந்தையும், இறைவனின் தொழில்கள் ஐந்தையும் ~~நிறங்களோர் ஐந்துடையாய்|| என்பதன் மூலம் குறிப்பிட்டுள்ளார். தொழில்கள் ஐந்தாவது: தன்மாற்றத்தால் உருவெடுத்தல், உருவத்தை நிலைநிறுத்துதல், காலம் வரும்போது உருவம் நீக்கப்படுதல், உருவத்தில் உள்ள உயிரின் ஆக்கத்திற்கு வேண்டியதை அருளுதல், உயிர்களை மேலும் மேலும் பரிபக்குவம் செய்தல் என்பன. சூரியஒளிக்கென்று தனி நிறம் இல்லை என்று சொன்னாலும் அதில் தான் அனைத்து நிறங்களும் அடங்கி இருக்கின்றன. அதுபோல், இறைவனுக்கென்று தனிப்பட்ட குணம் எதுவும் இல்லை என்றாலும், அவனுக்குள் தான் நாம் காணும் அனைத்துக் குணங்களும் அடங்கியுள்ளன. அதனால் தான் நிர்குண பிரம்மம் எனவும், சகுண பிரம்மம் அவன் அழைக்கப்படுகிறான். இக்கருத்தைத்தான் யாவையுமாய் அல்லையுமாய் எனத் திருவாசகம் குறிப்பிடுகிறது.

தானே ஆதியாய் இருப்பதால், அவனுக்குத் தாயும் தந்தையும் இல்லை. தோற்றம் இல்லாமலும் மறைவு இல்லாமலும் என்றும் நிரந்தரமாக இருக்கும் சிவன், ஒளியைத் தன்னகத்தே வைத்திருப்பதால் ~சோதியன்| என அறியப்படுகிறான். சிவனுக்கு தோற்றப் புள்ளியோ, மறையும் புள்ளியோ,

நடுப்புள்ளியோ இல்லை என்பதால் ~~ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே|| எனப் புகழப்படுகிறான். சிவனுக்கு ஆதியில்லை; ஆனால் பிரபஞ்சத்திற்கு அவன் ஆதியாக இருக்கிறான்; என்ற தத்துவம் இங்கு வைக்கப்பட்டுள்ளது. அவனுக்கு கரு இல்லை; ஆனால் அவன் கருவாகிறான் என்பதை ~கருவன்றியே நின்று கருவாகும்|; என திருமந்திரம் குறிப்பிடுகிறது.

புலன்கள் வழி பெறப்படும் அறிவு பெரும்பாலும் அறிவியல் தொடர்பிலான ஆய்வு முடிவுகளையும்;, அந்தக்கரணங்களின் கலப்போடு வெளிப்படும் போது அதே புலன் வழி அறிவு உலக ஞானத்தை உணர்த்தும் என்பதை,

~~கூர்த்த மெய்ஞ்ஞானாத்தால் கொண்டுணர்வார் தம் கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுர்வே||(திரு. சி. பு. 75)

என வரும் அடிகள் குறிப்பிடுகின்றன. இக்கருத்தானது, ஆன்ம தத்;துவங்கள் இருபத்து நான்கினாலும் அறிந்து கொள்ள முடியாத நிலையில் இருப்பவனே இறைவன் என்பதை நமக்கு உணர்த்துகிறது. தோற்றமும் மாற்றமும் இல்லா இறைநிலையை வரவு இல்லாதவன் எனவும், மறைவு இல்லா நிலையை போக்கில்லாதவன் எனவும் குறிப்பிட்டு, ஒடுக்க நிலையில் சிவனன்றி வேறு பொருள் இன்மையால் இன்னொரு பொருளோடு புணர்ப்பு இல்லாதவன் எனச் சிவபுராணம் நம்மை சிந்திக்க வைக்கிறது.

தில்லையில்; நடனம் ஆடிய திருவடியால் பலவுயிர்களிலிலும்; இடைவிடாது நடிப்பவனாய் இறைவன் நிற்கிறான் என்பதை ~~தில்லை மூதூர் ஆடிய திருவடி பல் உயிர் எல்லாம் பயின்றனன் ஆகி|| என்ற திருவாசகப் பகுதி உணர்த்துகிறது. மேலும், அவன் அவைகளிடம் எண்ணில் அடங்காத பல்வேறியல்புகளாக விளங்கி, மண்ணுலகையும், விண்ணுலகையும், வானோருலகையும் செறிந்த கல்வியோடு படைத்தும் காத்தும் அழித்தும் என செயல் புரிகிறான் என்பதும் தெளிவாகிறது. இக்கருத்துக்களால் இறைவனின் வியாபக்தையும்; அவன் வெளிப்பாடாய் விளங்கும் பல்லுயிர்ப் பெருக்கத்தையும் அறிய முடிகிறது.

~~மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்|| எனக் காட்டி இறைநிலையின் தன்மாற்றத்தையும், அதனால் வெளிப்படும் பிரபஞ்ச விரிவையும் தெளிவாகப் பேசுகிறது திருவாசகம். இதுவரை வந்த பிரபஞ்சத் தோற்றங்களும், இனிவர உள்ளவற்றிற்கும் இறைநிலையின் இருப்பே காரணம் என்பது தெளிவாகிறது. அவை வெளிப்பட இறைநிலையின் சீர்மையும், அதன் பேரறிவும் தான் காரணம் என்பது ஞானத்தின் உச்சம். அண்மையில் வெளிவந்த அறிவியல் ஆய்வொன்று, ~~பிரபஞ்ச இருப்பு ஆற்றல் மொத்தத்தின் 5 சத ஆற்றல் மட்டுமே பஞ்சபூதங்களாய் மாற்றம் பெற்று நாம் காணும் பிரபஞ்சத் தோற்றமாய் வெளிப்பட்டிருக்கிறது||4 என்பதைத் தெரிவிக்கிறது. இந்த உண்மையை முன்னமே திருவாசக ஞானம் தெரிவித்துள்ளது. சிவபுராணம்; பிரபஞ்ச ஒடுக்க நிலையிலும் இறைநிலையின் செயல்தன்மையை எடுத்துரைக்கின்றது. சிவனே ஆதியாக இருப்பதால், ஆதிநிலையை ஒளிகூடத் தோன்றாத இருள்நிலை என்று குறிப்பிடுகின்றார் மணிவாசகர். சிவம் என்ற ஆதிநிலை

பிரபஞ்சத்திற்கு உள்ளும், புறமுமாய், எங்கும் வியாபித்து, அதுவே தோற்றம் ஒடுக்கம் அனைத்திற்கும் மூலம் என்ற தத்துத்தைப் புரியவைக்கிறது சிவபுராணம்.

~~அருக்கனில் சோதி அமைத்N;தான் திருத்தகு

மதியில் தண்மை வைத்தோன்||(திரு. தி. ப. 20)

என வரும் பகுதியில் சூரியனிடம் ஒளியையும், திங்களிடம் குளிர்மையையும், தீயினிடமாக வெப்பத்தையும், ஆகாயத்தினிடம் எல்லாப் பூதங்களும் கலந்திருக்கும் ஆற்றலையும், காற்றினிடத்துக் கிளர்ந்தெழும் ஆற்றலையும், தண்ணீரில் இனிய சுவையையும், மண்ணிடத்துத் திட்பத்தையும் வைத்தவன் இறைவன். அவனே கோடிக்கணக்கான உயிர்களை அவற்றிற்குறிய இடங்களில் அமைத்து இப்பபிரபஞ்சத்தை உருவாக்கியுள்ளான் என நிரூவுகிறார்; மணிவாசகர். ஆற்றலின் திணிவும் அதன் வியாபக விரிவாய்க் காணப்படும் இடமும் தான் பிரபஞ்ச தோற்ற ஒடுக்கம் எனத் தீர்மாணிக்கிறது திருவாசகம்.

**திருவண்டப் பகுதியின் ஞானத்தெளிவு**

விஞ்ஞானம் வெளிப்படும் முன்பே அண்ட அறிவியலைப் பேசியுள்ளது திருவாசகம். மேலும், திருவண்டப்பகுதியால் பிரபஞ்ச விரிவைத் தன் துவக்கத்திலேயே அது தொட்டு விடுகிறது. அண்டங்கள் யாவும் உருண்டை வடிவின என்ற அறிவை,

~~அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பு அரும் தன்மை, வளப் பெறும் காட்சி
ஒன்றனுக்கு ஒன்று நின்றெழில் பகரின்
நூற்று ஒரு கோடியின் மேற்பட விரிந்தன,
இல்நுழை கதிரின் துண்அணுப் புரைய,
சிறிய ஆகப் பெரியோன், தெரியின்||( திரு. தி. ப. 1-6)

எனத்துவங்கி அறிவியல் தன் அரிச்சுவடி காணும் முன்னமே அறிவித்து விடுகிறது திருவாசகம். பிறக்கம் என்பது குவியல் அல்லது தொகுதியைக் குறிப்பிடுகின்றது. அண்டங்கள் ஒன்றைவிட ஒன்று அளப்பருந்தன்மையும் வளத்தாற் பெரிய காட்சியும் உடையனவாக விளங்குகின்றன. இறைவனின் திருமேனிப் பெருமையோடு நோக்கும் போது, இப்படியான பலகோடி அண்டங்கள் வீட்டின் ஓட்டுத்துளை வழியாக வீட்டினுள் விழும் சூரிய ஒளியில் காணப்படும் பரமாணுக்கள் போல சிறியனவாகக் காணப்படுகின்றன என்பதைத் திருவாசக ஞானம் வெளிப்படுத்திக் காட்டுகின்றது.

**குணி குண தத்துவத்துவம்**

குணி குண தத்துவத்துவ அடிப்படையில் நோக்கும் போது, இறையாற்றல் பார் எனப்படும் பிருதிவியினடத்து சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் எனப்படும் ஐந்து இயல்புகளாயும், நீரினிடத்து ஒளி,

ஊறு, ஓசை, நாற்றம் என்ற நான்கு குணங்களாயும், தீயினிடத்து ஒளி, ஊறு, ஓசை என்ற மூன்றாகவும்;, வளியினிடம் ஊறு, ஓசை என இரண்டாகவும்;, வெளியினிடத்து ஓசையென்ற ஒரு இயல்பாகவும் இருப்பதைத் தெள;ளத் தெளிவாகத் தெரிவிக்கிறது திருவாசகம்.

~~பாரிடை ஐந்தாய் பரந்தாய் போற்றி!

நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி!

தீயிடை மூன்றாய் திகழ்ந்தாய் போற்றி!

வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி!

வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி!||( திரு. போ. தி. 137-141)

என்ற பதிவு பஞ்சபூதங்களின் ஐந்து இயல்புகளில்; ஒவ்வொரு பூதத்திற்கும் ஒரு இயல்பு பிரதானம் என்றாலும் ஏனைய இயல்புகள் ஏனைய பூதங்களின் கலப்பால் விளைந்தவை என்பது தெளிவாகிறது. இருப்பாய் இருந்த இப்பிரபஞ்சம் இயக்கநிலை கண்டபோது, முதன் முதலாய் வெளிதான்;; வெளிப்பட்டது. அதன் தொடர் மாற்றத்தால் தான், நாம் காணும் இப்பிரபஞ்சம் உருவானது என்ற கருத்து இப்பகுதியால் தெளிவாகிறது. பஞ்சதன் மாத்திரைகளின் ஆற்றல் வேறுபாடுகள் தான் தூலமாய் நாம் காணும் பஞ்சபூதங்கள் என்பது தெளிவாகிறது. இதே கருத்து உண்மை விளக்கம் என்ற மெய்கண்ட சாத்திர நூலில் விளக்கமாகத் தரப்பட்டுள்ளது.

மேலும், வான் ஏனைய பூதங்கள் தோன்றுவதற்கு இடம் தந்து விரிந்து நிற்பது போல, இறைவன் பிரபஞ்சம்; தோன்றுதற்கு நிமித்தகாரணனாய், அருவாய், சர்வவியாபியாய் இருத்தலின் ~வானாகி| எனவும், மண் எல்லாப் பொருளையும்;; தாங்கி உருவாய் நிற்பது போல் எல்லாம் நிலைபெறுவதற்கு இடனாயும் உருவாயும் விளங்குவதால் ~மண்ணாகி| எனவும் போற்றப் படுகிறார். வளி உயிரின் இயக்கத்திற்கு இன்றியமையததாய், அனைத்தையும் இயங்கச்செய்வதாய், ஊறுணர்ச்சிக்கு வெளிப்படுவதாய், அருவுருவாய் இருப்பது போலவே இறைவனும் எல்லா ஆன்மாக்களையும் இயக்குபவராய், அருவுருவாய் விளங்குவதால் ~வளியாகி| எனவும், ஒளி உயிர்களின் வளர்ச்சிக்கு இன்றியமையாததாக, பொருள் விளக்கம் செய்வதாக, சுட்டு ஒன்றுவிப்பதாக இருப்பது போல இறைவன்; உயிர்களின் ஞான வளர்ச்சிக்கு இன்றியமையாதவராக, பொருட்களை சித்து, அசித்து என விளக்கம் செய்பவராக இருத்தலால் ~ஒளியாகி| எனவும் இருப்பதை

~~வான் ஆகி மண் ஆகி! வளி ஆகி ஒளி ஆகி!

ஊன் ஆகி! ஊயிர் ஆகி, உண்மையும் ஆய்! இன்மையும் ஆய்க்,

கோன் ஆகி! யான் எனது என்று அவர் அவரைக் கூத்தாட்டு

வானாகி நின்றாயை, என் சொல்லி வாழ்த்துவனே!||( திரு. திரு. அ.உ.11-15)

என வரும் திருவாசகப் பகுதி தெரிவிக்கின்றது. இந்த விளக்கத்தால்; இறைவன் உருவாக, அருவாக, அருவுருவாக விளங்குவதுடன் அனைத்திற்கும் ஆதாரமான ஞானசக்தியாகவும் இருக்கிறான் என்பது உணர்த்தப்பட்டுள்ளது. ~~வேறு வேறு உருவம், வேறு வேறு இயற்கையும் நூறு நூறு ஆயிரம்

இயல்பினது ஆகி|| என விரியும் பகுதி பொருட்களின் குணியும் குணமுமாக இறைவன் விளங்குகிறான் என்பதைத் தெளிவாகக் குறிப்பிடுகிறது.

~~திருவைந்தெழுத்தில் நம என்பது பாசம், ய என்பது பசு. இவற்றை நீக்கிவிட்டால் சிவ என்ற இரண்டெழுத்து மிஞ்சி சிவசக்தியைக் காட்டும்|| என்பது தண்டபாணி தேசிகர் விளக்கம். மேலும், வான், காற்று, நெருப்பு, நீர், மண் என்ற ஐந்து பூங்களுமாகி, சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற புலன்களாகி, ஏனைய பொருள்களாகி, வெளிப்படும் வேறுபாடுகளாகி இருக்கத் தான் மட்டும் வேறுபாடில்லாமல் விளங்கும் பெருமானை தில்லையம்பலத்தில் கண்டநிலையை ~~பூதங்கள் ஐந்து ஆகிப் புலன் ஆகிப் பொருள் ஆகிப் பேதங்கள் அனைத்தும் ஆய்|| என விளக்குகின்றார் மணிவாசகர். ஒரே ஆற்றல் தான் நின்று இயங்குகின்ற கருவி கரணங்களால் வேறு வேறு செயல்கள் வெளியாவது போல இறையாற்றலே வேறுபட்ட பொருள்களுக்கும் தோற்றங்களுக்கும் காரணமாவதை இதனால் அறியமுடிகிறது. காட்டாக மின்னாற்றல் ஒன்றே விளக்கில் வெளிச்சமாகவும், விசிறியில் சுழற்சியாகவும், சூடேற்றியில் வெப்பமாகவும், ஒலிப்பானில் சப்தமாகவும் வெளிப்படுவது போல, இறையாற்றலும் சார்ந்த பொருளுக்கும் நிலைக்கும் ஏற்றவாறு மாற்றம் பெறும் என்பது அறிவியல் அணுகுமுறை.

**கட்டுக்குள் வராத காலமும் வெளியும்**

உலகில் தோன்றிய எப்பொருளுக்கும் காலநிலைகளும் தோற்ற ஒடுக்க நிலைகளும் உண்டு என்பது வெளிப்படையான உண்மை. இதனை ~~பாளையாம் தன்மை, பாலனாம் தன்மை, காளையாம் தன்மை, காமுறும் இளமை, மேல்வரும் மூப்பு|| என்றெல்லாம் குண்டலகேசியில் அதன் ஆசிரியர் நாதகுத்தனார் குறிப்பிடுகிறார். ஆனால், சிவபெருமான் பிறப்பற்ற பிஞ்ஞகன், ஆதியும் அந்தமும்; இல்லதவன், அவனுக்கு தொடக்கமும் இல்லை முடிவும் இல்லை. முற்பட்ட பழமையான பொருள்கள் எல்லாவற்றிற்கும் முற்பட்ட பழம்பொருளாக உள்ளவன், பின்னர் உண்டாக இருக்கின்ற புதிய பொருள்கள் எல்லாவற்றிற்கும் மீண்டும் அத்தன்மை வாய்ந்தவன் என்பதை,

~~முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம் பொருளே!
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே!||( திரு. தி.வெ-9)

என்ற திருவாசக வரிகள் எடுத்துரைக்கின்றன. முன் பின் என்பவை காலத்தோடு இணைந்து தோன்றிய பொருள்களைக் கணிக்கும் போது கருதப்படுபவை. தோற்ற ஒடுக்க நிலைகளுக்குத் தான் காலதத்துவம் தேவைப்படுகின்றது. இருப்பு நிலையில் காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை என்ற ஏழு வித்யா தத்துவங்களும் வெளிப்படா நிற்பதை நினைவில் கொள்ள வேண்டும். இதனால், இறைவன் காலமென்னும் தத்;துவம் தோன்றுவதற்கு முன்பே விளங்குபவன் என்பது உறுதிப்படுகிறது.

**அவன் அவள் அது என அனைத்துமாய் அவனே**

பொல்லா வினையேன் எனவும், புகழுமா றொன்றறியேன் எனத் துவக்கி அருளப்பட்ட வரிகள்; உலகின் தோற்றம் முழுமையையும் எடுத்துரைக்கின்றன. அவை மெய்ஞானிகளும் விஞ்ஞானிகளும் என்றென்றும் வியந்து போற்றும் மகா வாக்கியங்களாக நிலைத்து விட்டன. இப்பகுதியில் ~புல்லாகிப் பூடாகி| என உயிரினப் பரிணாம தத்துவம் முழுமையும் தந்து தான் முழுமைப்பேறு எய்திய வீடுபேறுநிலை வரை பதிவுசெய்கிறார் மணிவாசகர். பிரபஞ்சத்தின் அனைத்து அமைப்புகளும் விண்துகள்களின் சேர்க்கைதான் என்பதையும், ஒவ்வொரு விண்ணிலும் சிவன் இருப்பதால் இந்தப் பிரபஞ்சம் முழுவதுமே சிவமயம் என்பதையும் அறிந்ததால்; தான் அவரால் புல்லாகிப் பூடாகி எனப் பேசமுடிந்தது. செல்களின் கூட்டமைப்பைப் பருவுடல் என்றும், உயிர் ஆற்றலாக விளங்குகிற விண்களின் சுற்றோட்டத்தை நுண்ணுடல் என்றும், வினைகளின் தொகுப்பைக் காரண உடல் என்றும் நாமறிவோம். பருவுலும் நுண்ணுடலும் விண்களால் ஆனது. காரண உடல் மன அலைகளால் ஆனது. என்னை இயக்குகின்ற எனது வினைப்பதிவாகிய காரண உடல் எனக்கு முன்பாக என் முன்னோர்களை இயக்கியது. வினைத்தொடராக வரும்; இந்த காரண உடல் தொடர்ச்சி தான் புல், பூடு, மரம், பறவை, பாம்பு, மனிதன் எனப் பலகோடி சீவன்களை இயக்கி அதன்பின் இன்று என்னையும் இயக்கிக் கொண்டிருக்கிறது. வருங்காலத்தில் எனது சந்ததிகளையும் இயக்கிக் கொண்டிருக்கும். காலம் செல்லச் செல்ல வினைகளின் தொகுப்பு பெருகுவதுடன் அது ஒரு நிரந்தரத் தன்மையையும் பெற்றுவிடுகிறது. இத்தொடர் நீள்வதைத் தான் ஆன்மா அழிவற்றது என அறிகிறோம். இவ்வாறான தொடர்ச்சியால், ஆன்மா பலப்பல தலைமுறைகளாக பலப்பல உடல்களை இயக்கி; சலிப்புற்றது. இந்நிலையைத்தான்; ~~எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்!|| என மணிக்கவாசகர் குறிப்பிடுகிறார். மேலும், மனிதப் பிறப்பு உருப்பெறும்; நிலையை

~~வழுத்துதற்கு எளிது ஆய் வார் கடல் உலகினில்,

யானை முதலா எறும்பு ஈராய|| (திரு. போ. திரு. 10-42)

என வரும் பாடல் அற்புதமாக விளக்கியுள்ளது. தண்டபாணி தேசிகர் உரைப்படி ~~யானை முதல் எறும்பு ஈறான கேடில்லாத யோனிகளிற் பிறத்தலினின்றும் தப்பியும், மனிதப்பிறவியில் தாயின் வயிற்றில் குன்றுதல் இல்லாத புழுக்கள் இடும் சண்டையில் தப்பியும், முதல் மாதத்தில் தான்றிக்காயின் வடிவுடையதாகி, இருவகைப் பட்ட தன்மையில் தப்பியும் என விரியும் முதல் முப்பது வரிகள் கருப்போபநிடதக் கருத்துக்களை அறிவிப்பனவாக அமைந்துள்ளன. உருவாகும் கருவானது இரண்டாம் மாதத்தில் கருத்தோற்றமாகிய ஒருதன்மையில் பிழைத்தும், மூன்றாம் மாதத்தில் தோன்றும் மதநீருக்குத் தப்பியும், நான்காம் மாதத்தில் பேரிருளுக்குத் தப்பியும், ஐந்தாம் மாதத்தில் சாதற்குத்தப்பியும், ஆறாம் மாதத்தில் கொலைக்குக் காரணமாகிய பழிச்;சொல்லுக்குத் தப்பியும், ஏழாம் மாதத்தில் கீழ்நிலத்தில் சரிதலுக்குத் தப்பியும், எட்டாம் மாதத்தில் உளதாம் துன்பத்திற்குத் தப்பியும், ஒன்பதாம் மாதத்தில் வரும் துன்பத்திற்குத் தப்பியும், பத்தாம் மாதத்தில் தாயும் தானுமாகப் படும் துன்பக்கடலில் விளையும் துன்பத்திற்குத் தப்பியும்|| என மனிதப் பிறப்பு உருவாகும் நிலைகள் வியந்தோதப்பட்டுள்ளது.

இப்பகுதியில் சொல்லப்பட்டுள்ள கருத்துக்கள் இன்றைய மருத்துவ ஞானத்தோடு ஒப்ப நிற்பதை அறிய முடிகிறது.

உலகத்தில் விதைக்காமல் விளைவு இல்லையாதலால், எத்தகைய வல்லுநராலும் காரணமின்றிக் காரியம் நிகழ்த்துதல் ஒண்ணாது. இறைவன் பெண், ஆண், அலியெனும் மூன்று தன்மைகளையும் ஒருசேர உடையவன். காரியத்தில் காணப்படும் யாவும் காரணத்திலும் அமைந்து இருப்பது மரபு என்ற உண்மையை வைத்து, காரியமாகிய பிரபஞ்சத்தில் பெண், ஆண், அலியெனப் பாகுபாடு இருப்பதால் இவற்றை ஆக்கிய இறைவனிடத்திலும் இம் மூன்று தன்மைகளும் அமைந்திருத்தல் இயல்பு என்பதை ~~பெண், ஆண், அலி எனும் பெற்றியன் காண்க!|| என்ற வாக்கு எடுத்துரைக்கிறது. அணுவின் நுட்பமாய் அறியப்படும் எலக்ட்ரான், புரோட்டான் மற்றும் நியூட்ரான் ஆகிய துகள்கள் நேர், எதிர் மற்றும் பொது மின்னுட்டம் பெற்றிருப்பது போலவே இறைவனும் தோற்ற நிலையில் ஆண், பெண், அலியென்ற நிலைகள் பெறுகிறான் எனபது அறிவியலோடு ஒப்பநோக்குதற்குரியது.

**உலகத் தோற்ற ஒடுக்கம் பேசும் திருவாசக ஞானம்**

திருவாசகம் தோற்ற ஒடுக்க நிலைபற்றி தெளி;வாகப் பேசுகிறது. பஞ்சபூதங்கள் அனைத்தும் ஒடுங்கிய நிலையில், சக்தி சிவத்துள் அடங்கி கருவாகி, ஆகாயமும் அழிந்து அதில் உலவும் காற்றும் அழிந்து, அதனைச் சார்ந்துளதாகிய தீயும், அதனைச் சார்ந்த நீரும், அதனைச் சார்ந்த மண்ணும் கெடினும் தான் மட்டும் கெடுதலின்றி அசைவற்றிருக்கும் தன்மையை,

~~வான் கெட்டு, மாருதம் மாய்ந்து, அழல், நீர், மண் கெடினும்,
தான் கெட்டல் இன்றி, சலிப்பு அறியாத் தன்மையனுக்கு|| (திருத்தெ. 18.)

என்ற திருவாசகப் பாடல் உணர்த்துகின்றது. இதில் அறிவியல் உண்மைகள் உள்ளுறையாக அமைந்துள்ளதை அறியமுடிகிறது. மேலும்,

~~உலகு அறியத் தீவேளாது ஒழித்தனனேல் உலகு அனைத்தும்
கலை நவின்ற பொருள்கள் எல்லாம் காண் சாழலோ!||(திருச். 13.)

என்ற பதிவில்; தோற்றுவிக்கப்பட்ட உலகம் ஒடுக்க நிலைபெற வேண்டுமானால் சக்தி சிவத்துள் அடங்க வேண்டு;ம். சிவம்; சக்தியைத் தன்னுள ஒடுக்கும் நிலையையே ~தீவேட்டான்| என்ற பதம் குறித்து நிற்கிறது. உலகமே தாமான இறைவன் உலக முழுதையும் ஒடுக்கத்தில் நிலைபெறச்செய்ய எண்ணி உமையம்மையாரைக் காரணச்சடங்குகளை இயற்றிக் கடிமணம் செய்தார். இல்லையெனில் உலகில் பொய்யும் பிசியும் புகுந்து ஒழுக்கம் குன்றி உலகிலுள்ள பொருள்களும் நிலைகலங்கும் என உலக ஒடுக்கக் காரணத்தைத் தெரிவிக்கின்றார் உரையாசிரியர். மேலும்,

~~கருஆய் உலகினுக்கு, அப்புறம் ஆய், இப்புறத்தே
மரு ஆர் மலர்க்குழல் மாதினொடும் வந்தருளி,
அரு ஆய், மறை பயில் அந்தணன் ஆய் ஆண்டுகொண்ட

திரு ஆன தேவற்கே சென்று ஊதாய், கோத்தும்பீ!||(திருக்கோ. 14.)

என்ற பாடல் தூலமாய் காணப்படும் உலகத் தோற்றத்திற்கு ஆற்றல் தான் காரணமாகிறது என்பதை எடுத்துரைக்கின்றது. இறையாற்றல் சொல்லாத நுண்ணுணர்வு பெற்றது. ஒடுக்க நிலையில் மொத்த ஆற்றலும் இருப்பாற்றல் என்பதால் கருஆய் என குறிக்கப்பட்டுள்ளது. அதுவே அப்புறமான சிவம் என்ற ஒடுக்க நிலை. இப்புறத்தே என்பது தோற்ற நிலையைக் குறித்து நிற்கிறது. தோற்ற நிலையில் சிவம், சக்தி என்ற இரு நிலைகள் உள்ளன. இவை ஆற்றல் உலகம், பொருள் உலகம் என இரண்டாக அறியப்படுகின்றன. இந்நிலையை, இயற்பியல், நுஸ்ரீஅஉடு2 என்ற சமன்பாடால் குறிப்பிடுகின்றது. ஆற்றல் பொருளாகும், பொருள் ஆற்றலாகும் என்ற இந்த ஐன்ஸ்டீன் தத்துவம் தான் நவீன அறிவியலைக் கட்டமைத்துள்ளது. பிரபஞ்ச ஞானம் பற்றி அறிவியல் சிந்திக்கும் முன்னமே, இருப்புநிலையாகிய சிவமும், ஆற்றல் நிலையாகிய சக்தியும் கொண்டதே நாம் காணும் இருமைநிலை(னுரயடவைல);ப் பிரபஞ்சம் என்பதை திருவாசகம் தௌ;ளத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது. மேலும், திணிவு பெற்ற ஆற்றல் தான் பொருள் என்பதால், பொருள் நிலையிலும் ஆற்றல் அதனுள் உள்ளார்ந்து இருப்பது அறியப்பட வேண்டியதாகும். ஒடுக்க நிலையென்ற இருப்பு நிலையிலும் அதனுள் இயக்கம் நுண்ணளவில் இருப்பதென்பதை சொல்லாத நுண்ணுணர்வாய் காட்டுகின்றது திருவாசகம். இந்நிலையை சுழியநிலை ஆற்றல்(ணநசழ pழiவெ நநெசபல) என இயற்பியல் குறிப்பிடுகின்றது. இந்தச் சூழலை அறிவியலும் சைவசித்தாந்தமும் இருவேறு வகையில் விளக்கி இருந்நதாலும், அவை இரண்டும் உண்மை நிலை கண்டபோது ஒன்றுபட்டு நிற்பதை அறியமுடிகிறது.

**உயிர்களின் தோற்ற நிலையில் நின்று அதன் காரணம் தேடிய திருவாசகம்,**

~~விச்சு அது இன்றியே, விளைவு செய்குவாய்

விண்ணும், மண்ணகம் முழுதும், யாவையும்

வைச்சு வாங்குவாய்||(திரு. திருச். 96-98.)

எனத் தன் முடிவை தெளிவாகப் பதிவு செய்துள்ளது. உலகத்தில் விதைக்காமல் விளைவு இல்லை என்பது உறுதி என்பதால், எத்தகைய வல்லுநராலும் காரணமின்றிக் காரியம் நிகழ்த்துதல் இயலாது. ஆனால், இறைவன் வித்தின்றி விளைவு செய்கின்றான. உயிர்கள் தம் முதல் உற்பவ காலத்தில் கேவல நிலையில் ஆணவமலத்தில் கட்டுண்டுகிடக்கும் போது அவைகளுக்கு நுண்கருமமாக விருப்பு வெறுப்பு நிகழ்வதையே வித்தாகக் கொண்டு தனு கரணகங்களைக் கொடுத்துச் சிருட்டிப்பவன் இறைவன். இச்சூக்கும கன்ம உண்மையைச் சிவஞானபோத மாபாடியத்துள் சிவஞான சுவாமிகள் பிரபஞ்சம் அநாதியாதலால் முதற்படைப்பு நம்மனோரான் அறிய வாராமையான் முதற்படைப்பின்கண், ~விச்சதின்றியே விளைவு செய்குவாய்| என ஓதிய திருவாக்கான் கண்டுகொள்க என உரைத்தார். இதனால் காரியப்படும் கன்மமில்லாமலே இறைவன் சிருட்டிப்பான் என்பது பெறப்படுகிறது. திருநாவுக்கரசு சுவாமிகளும் ~விச்சின்றி நூறு செய்வானும்| எனக் குறிப்பிடுகிறார். உலகிற்கு வித்து

மாயை ஆவதால் அது காணப்படாததாய், காரியத்தின் உடனிற்பதாய், வேறின்றி விளங்கும் திறனுள்ளதாய் இறைநிலை போலவே அறியப்படாது உள்ளது என்பது பெறப்படுகிறது.

**முடிவுரை**

ஆற்றல் பொருளாகும் என்ற பத்தொன்பதாம் நூற்றாணடு விஞ்ஞான விளக்கத்தை, இறைநிலையே புலப்படு நிலையில் தோற்றச் சுடரொளியாகவும், புலப்படா நிலையில் சொல்லாத நுண்ணுணர்வு என்னும் இருப்பு ஆற்றலாகவும் இருப்பதைத் திருவாசகம் ஒன்பதாம் நூற்றாண்டிலேயே தத்துவஞானமாய் உலகுக்குத் தந்து நம் விழிகளை வியப்பால் விரியவைக்கிறது. ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க எனப் போற்றும் திருவாசகத் தத்துவம ஒன்றிலிருந்துதான் இப்பிரபஞ்சம் தோன்றியுள்ளது எனக்கூறும் பெருவெடிப்புக் கொள்கையை அன்றே சொன்னது அறிவியல் உண்மை. இறைவன் காலமென்னும் தத்;துவம் தோன்றுவதற்கு முன்பே விளங்குபவன். அவனே உலக உற்பத்தியின் பரிணாம தத்துவம் என்பது தெளிவாகிறது. ~~மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்|| என்ற வாக்கியம் இறைநிலையின் தன்மாற்றத்தையும், வெளிப்பட்ட பிரபஞ்ச விரிவையும் காட்டுகின்றது. மேலும், வெளிவந்த பிரபஞ்ச தோற்றங்களனைத்திற்கும், இனிவர உள்ள தோற்றங்களனைத்திற்கும் இறைநிலையின் இருப்பாற்றலே காரணம் என அறிவியல் நோக்கில் விளக்கம் தந்துள்ளது திருவாசகம். சித்தும் சடமுமான பொருள்கள் யாவும் தத்தம் காரணத்துள் ஒடுங்க, காரணங்கள் யாவும் சத்தியுள் ஒடுங்க, தான் மட்டும் ஒன்றினும் ஒடுங்காமல் அந்தமாதியாயிருத்தலின் ~~எல்லா உயிர்க்கும் ஈராய், தனக்கு ஈறில்லாதவனாய்க்||; காண்கிறது போற்றித் திருவகவல் பகுதி. மனிதன் இறைவனுக்குச் சொன்ன தத்துவமாய் அறியப்படும் திருவாசகம், இறைவனின் ஆதியும் அந்தமுமிலாத் தன்மையை உறுதி;செய்து, உலகத் தோற்ற ஒடுக்க ஞானமாய், தமிழுக்கோர் மணிமுடியாய் நின்று இ;றைத்தத்துவத்தை எடுத்துரைப்பதை விஞ்ஞான உலகம் வியந்து பார்க்கிறது.

**மேற்கோள் நூற்பட்டியல்**


1. அழகர் ராமானுஜம். *மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய சிவ புராணம் விளக்கவுரை*. அன்னை தொட்டம்மா பழனியப்பா அறக்கட்டளை, 2016.
2. கா. சுப்பிரமணிய பிள்ளை. *மெய்கண்ட சாத்திரம் மூலமும் உரையும்: திருவருட்பயன்*. சாரதா பதிப்பகம், 2016.
3. ச. தண்டபாணி தேசிகர். *திருவாசகம்*. சாரதா பதிப்பகம், 2017.
4. தமிழருவி மணியன். *வாழ்வே ஒரு மந்திரம்*. கற்பகம் புத்தகாலயம், 2022. *தொல்காப்பியம்*.



**License**

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

Our journal adopts CC BY License Creative Commons Attribution 4.0 International License http://Creativecommons.org//license/by/4.0/ . It allows using, reusing, distributing and reproducing of the original work with proper citation.